5th November 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த மாதிரியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. பிராஸிக்யூஷன் செய்து (one person was arrested in one village) மற்ற இடங்களிலும் அந்த மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI R. SRINIVASA IYER: ராமநாதபுரம் ஜமீனிலே, 1948-ம் வருஷத்திய 26-வது சட்டம் வந்து 9 வருஷமாகிறதே. வருஷத்திற்கு ஒரு கோடி ரூபாய் வீதம் பாக்கியிருக்கிறதா? கட்டுப்பாடாக வரி செலுத்தக் கூடாது என்று சில பேர்கள் வரி செலுத்தாமல் இருக்கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: எல்லாம் சேர்ந்து இப்போது வசூலாக வேண்டியது அந்தத் தொகை என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஸைக்ளோன் பெருமளவில் ஏற்பட்டதால் 3, 4 வருஷங் களில் தாராளமாக வரி வசூல் தள்ளி வைக்கப்பட்டது. பல காரணங் களால் அந்தத் தொகை வசூலாகவில்லை.

Repairs to bridges on the Vikravandi Lower Anicut road.

* 881 *Q.*—SRI A. GOVINDASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) at what stage is the work of carrying out repairs to the bridge on the Vikravandi Lower Anicut road;

(*b*) how long will it take to complete the repairs; and

(*c*) whether there is any proposal under consideration of the Government for the construction of a causeway across the Gadilam on the Vikravandi Lower Anicut road?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) The Member presumbaly refers to the construction of the bridges at mile 100/6, 102/1 and 103/2 of the Vikravandi Lower Anicut road. The bridge work at mile 100/6 has since been completed and the bridges at miles 102/1 and 103/2 are expected to be completed on 31st December 1958 and 31st March 1958 respectively.

(*c*) A submersible bridge across the Gadilam at mile 110/2 of the Vikravandi Lower Anicut road has already been constructed. There is no other proposal to construct a bridge across the Gadilam on this road.

SRI A. GOVINDASAMY: இந்த விக்ரவாண்டி லோயர் அணைக் கட்டு ரோடானது, கடிலத்தில் காஸ்வே போடும் பட்சத்தில் சென்னை யிலிருந்து பண்ருட்டி போக 20 மைல்கள், 30 மைல்கள் குறையும் என்ற காரணத்தினாலும், விவசாயிகள் மாட்டு வண்டி மூலம் போக சௌகரியம் இருக்கும் என்ற காரணத்தினாலும், ஒரு காஸ்வே பிரிட்ஜ் போட அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI P. KAKKAN: இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Manufacture of Agricultural implements

*882 Q.— SRIMATHI A. S. PONNAMMAL: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா:—

நிலக்கோட்டை தாலுக்கா, அம்மைநாயக்கனூரில் (Small Scale Industries Scheme) திட்டத்தின் கீழ் விவசாயக் கருவிகள் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேச முண்டா?

[5th November 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have already started a Service Centre for the manufacture of farm implements and agricultural machinery at Tiruchirappali and three blacksmithy and carpentry workshops in Pettai (Tirunelveli district) Mannargudi and Cuddalore and an Engineering Workshop at Rajapalayam where also some items offarm implements could be manufactured. It is not therefore, proposed to start another unit in this State for the same purpose.

SRIMATHI A. S. PONNAMMAL: சபாநாயகர் அவர்களே, என்னுடைய தாலூக்காவில் விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே இந்த மண் வெட்டி, கலப்பை இவையெல்லாம் தேவைப் படுகின்றன. ஆசாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தொழிலை நடத்த அரசாங்கம் பணம் கொடுக்க முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவ்வாறு தொழிற்சாலை ஏற்படுத்த முன்வந்தால் அதற்கு உதவியளிப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI K. B. S. MANI: ஸார், சீர்காழி தாலூக்காவில் தமிழ் நாடு இண்டஸ்ட்ரியல்ஸ் என்று ஒன்று வைத்து நல்ல முறையில் ஜில்லா பூராவுக்கும், தென் ஆற்காடுக்கும் உதவியளித்து வருகிறார்கள். அவர்கள் விவசாயக் கருவிகள் செய்து வருகிறார்கள். அதனுடைய ஸ்தாப கர்த்தா மிகவும் ஏழ்மையான நிலையில் இருப்பதால், இந்தத் தொழிற் சாலைக்கு சப்ஸிடி கொடுத்து இந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரி இருந்தால் அரசாங்கத்திடமிருந்து எத்தகைய உதவி வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் பரிசீலனை செய்து எவ்வளவு உதவி செய்யலாமோ, அதைச் செய்யலாம்.

SRI T. VELUCHAMI: விவசாயக் கருவிகளாகிய மண்வெட்டி, கொழுக் கலப்பை முதலியனவகளுக்கு வேண்டிய இரும்பு தற்சமயம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. முன்னால் கோவாப்பரேடிவ் சொஸைடி மூலமாக இரும்பு வினியோகம் செய்யப்பட்டது போல மீண்டும் வினியோகம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது இரும்பு பற்றாக்குறையாக இருக்கிறது. அதனால்தான் இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் எவ்வளவு கூடுமோ அவ்வளவு விவசாயத் தேவைக்கு ஒதுக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

Tapping of neera from coconut tree

*883 Q.—SRI S. LAZAR (on behalf of Sri P. S. K. Lakshmipathi Raju): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப் பாரா ?

(அ) மது மாக் தொழிலாளர்கள் குறிப்பிட்ட சில ஜில்லாக்களில் தென்னை மரத்திலிருந்தும் பதனியிறக்க அனுமதியளிக்கப்பட்டிருக் கிறதா ?

(ஆ) அப்படியானால், இந்த முறை மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக் கப்படுமா ?